بسم الله الرحمن الرحيم

## **Friday Sermon** / *வெள்ளிக்கிழமை குத்து.்.பா*

**(01 September 2017/ 09 Dhul Hijjah 1438 Hijira)**

# THE NIGHT OF EID-UL-ADHA

## ஈதுல் அத்ஹ இரவு



### HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

சலாமிற்கு பிறகு தஸ்ஹீதும் தஅவசும் அல்.்.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு தம் உரையினை ஆரம்பித்தார்.

ஈதுல் அத்ஹ இரவு, படைத்தவனிடமிருந்து வெகுமதிகள் கிடைக்கும் ஓர் இரவாகும். ஆகவே இந்த இரவுக்கு உயரிய மதிப்பை அளிக்க வேண்டும். நமது அன்புக்குரிய தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள்

கூறினார்கள். **“இரண்டு ஈதின் இரவுகளில் எவர் ஒருவர் பிரார்த்தனையில் மூழ்கியிருக்கின்றாரோ, அவரது இதயம் கவலைக்குரிய கட்டத்தில்க்கூட உயிருடனிருக்கும். மற்றவர்களின் இதயம் மரண கட்டத்தை அடைந்து விடும். மட்டுமல்ல உயிர்த்தெழுதலன் நாளில் எழும்பும் எக்காளச்சத்தத்தைக்கேட்டும் அவர் மயக்கமடைய மாட்டார்.”**

ஒரு நபிமொழியில், கீழ்கூறும் இரவுகளில் பிரார்தனையில் மூழ்கியிருப்பவர், நிச்சயமாகவும் சொர்க்கத்தில் நுழைந்து வடுவார் என கூறப்பட்டிருக்கின்றது.

1. **கதர் இரவில் (ரமளானின் இறுதி பத்து இரவுகளில், ஒற்றை இரவுகளில் ஒன்றில்)**
2. **ஈதுல் பித்தர் இரவு (ஷவ்வால் நாட்களின் முதல் இரவில்)**
3. **தர்வியா இரவு (துல்ஹஜ்ஜு மாதம் 8 – ம் இரவு)**
4. **அறபாத்து இரவு (துல்ஹஜ்ஜு மாதம் 9 – ம் இரவு)**
5. **நஹ்ர் அரவு (துல்ஹஜ்ஜு மாதம் 10 – ம் இரவு)**

இன்று, முஸ்லீம்கள் இரவுநேரங்களில் தூங்காமலிருப்பது, இவ்வுலக காரியங்களுக்காகும். ஆனால், மதத்திற்காக இவ்வாறு செய்வதில்லை. மதத்திற்காக, இஸ்லாமுக்காக ஒரு இரவு அவர்கள் செலவு செய்திருந்தால் அது அவர்களுக்கு எவ்வளவு நன்றாகயிருந்திருக்கும்? இந்த இரவு இறைவனிடமிருந்துள்ள வெகுமதிகளின் இரவாகும். ஆகவே நாம் இதிலிருந்து பயனடைய வேண்டும். இந்த இரவில் நமக்கு தேவையானதனைத்தையும் அல்லாஹ்விடம் கேட்க்க வேண்டும். அது நம் பௌதீக தேவைகளாகலாம். அல்லது ஆன்மீக தேவைகளாகலாம். ஆனால் ஆன்மீக தேவைகளுக்கே மிக பெரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பது.

ஈதுல் அத்ஹா, முஸ்லீம்களின் பெரிய பெருநாளாகும். அது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) மின் நடைமுறையை நினைவில் கொள்ளும் நாளாகும். அன்னார் முழுமையாகவும் படைத்தவனுக்கு கீழ்படிந்துக் கொண்டவராவார். தம் பிரிய மகன் இஸ்மாயிலை (அலை) பலி அர்ப்பித்திட அன்னார் ஆயத்தமானார். பௌதீக காரியங்களைவிட ஆன்மீக காரியங்களுக்கு அன்னார் முன்னுரிமை அளித்தார். இப்ராஹீம் (அலை)மைக் குறித்து திரு குர் - ஆனிலும் திரு நபிமொழிகளிலும் விவரிக்கப்பட்டிருக்கின்றது. இத்தினம், மகிழ்ச்சிக்குரிய ஒரு கொண்டாட்ட நாள்மட்டுமல்ல, படைத்தவனிடமான தங்களின் கடமைகளை நினைவூட்டும் நாள்க் கூடயாகும். மட்டுமின்றி அது தங்களின் சகோதர – சகோதரிகள் மீதான கடமைகளை நினைவூட்டுகின்றது. அவர்களைப் போன்றே மானிட சகோதரங்கள் மீதான நம் கடமைகளையும் அது நினைவூட்டுகின்றது.

இவ்வுலக செயல்பாடுகளின் (விவகாரங்களின்) நடுவில்பட்டு, நாம் பெரும் பாலோரும் ஈதுல் அத்ஹாவின் முக்கியத்துவத்தை இழந்திருக்கின்றோம். ஒரு விஷயத்தை நினைவூட்டுவதற்காக நடத்தப்படும் ஈதுல் அத்ஹா என்பது நம் அனுதின வாழ்க்கையில் நடைமுறையில் கொண்டு வரவேண்டிய ஒன்றாகும் என்ற உண்மையை நாம் மறந்து கொள்கின்றோம். கடந்து சென்ற நூற்றாண்டுகளை ஒப்பிட்டு பார்த்தால் இந்த நூற்றாண்டுக்கு மிக முக்கியத்துவம் இருக்கின்றது. காரணம் மானிட காரியங்கள் மிக பெரிய அளவிற்கு சிக்கலாகயிருக்கும் ஒரு காலகட்டமாகுமிது. கடந்த காலங்களைவிட சமத்துவமும் சமூக நீதியும் மேலும் அளிக்கப்பட வேண்டும். துயரமடைகின்றவர்களுக்காக. தங்களின் தனிப்பட்ட முறையிலான உரிமைகளை கைவிட ஆயத்தமாகி கொள்ள வேண்டும். நாம்

நம்பிக்கை வைத்திருக்கும் அமைப்பிற்காக எல்லா வித தியாகங்களுக்கும் அவர் ஆயத்தமாகி விட வேண்டும். விலை உயர்ந்ததாக நாம் எண்ணும் கொள்கைக்காக நிலைகொள்ள வேண்டும்.

இவ்விஷயத்தில் நாம் செய்யும் ஆசார முறையிலான தியாகங்களுக்கு, அதற்கேற்ப மதிப்பை அளித்துக்கொள்ளவேண்டும். இத்தகைய கொண்டாட்டங்கள், அனைத்து முஸ்லீம்களுடையவும் அடிப்படை விஷயங்களை கணக்கிலெடுத்து கொண்டே அமைய வேண்டும்.

முஸ்லீம்கள் தனிபட்ட முறையிலும், இஸ்லாமிக அமைப்புகள் ஒன்றுக்கொன்றும் கடித்து முறித்துக்கொண்டிருக்கின்றனர். ஒற்றுமை இல்லாத காரணத்தால் அவர்கள் பலவீன மடைந்துள்ளனர்.

அவர்கள் ஒன்றுக்கொன்று சண்டையிலும் சச்சரவிலும் மூழ்கியிருக்கின்றனர். ஈதுல் அத்ஹ நமக்கு ஒரு பாடம் வழங்குகின்றது. அதாவது நம் ஈமானை மேலும் பெற்றுக்கொள்வதக்கு நம்மை அது ஊக்குவிக்கின்றது. உம்மத்திற்காக தியாகங்கள் செய்ய அது நம்மை ஆயத்தமாக்கின்றது. இவ்வாறு செய்ய நமக்கு முடிந்து விட்டால், ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) மிற்கும் இஸ்மாயில் (அலை) மிற்கும் அளிக்கப்பட்ட வெகுமதிகளை போன்று நமக்கும் வெகுமதிகள் அளிக்கப்படும். காரணம் அவர்கள், அவர்களின் கடமைகளை நிறைவேற்றுவதில் உறுதியாகயிருந்தனர். ஒரு மனிதனுக்கு பூமியில் சமர்பிக்க முடியும், முற்றிலும் பெரிய சமர்ப்பணம்! முற்றிலும் பெரிய அக்கினிபரீச்சை! அதில் அவர்கள் இருவரும் வெற்றிவாகை சூடிக்கொண்டனர். நமது சமுதாயத்தில், தியாகத்தின் உண்மை ஒவ்வொரு இதயத்தலும் நுழைந்துவிட அல்லாஹ் அவனது கருணை

கடலால் உதவி புரிவானாக. இன்ஷா அல்லாஹ்! ஆமீன். **நான் என் தோழர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் ஈதுமுபாரக் நேற்கின்றேன். இந்த இரவில் நீங்கள் பிரார்த்தனையிலும் இறையெண்ணத்திலும் மூழ்கியிருங்கள். ஈது நல்வாழ்த்துகள் தெரிவித்த அனைத்து தோழர்களுக்கும் நான் எனது நன்றியை தெரிவிக்கின்றேன்.** உங்களுக்கு தெரிவது போன்றே உலகின் சில நாடுகளில் இன்று ஈது கொண்டாடுகின்றனர். இன்ஷா அல்லாஹ்! நாளை மௌரீஷியஸில் நாம் மறுபடியும் சந்திக்கின்றோம். முற்றிலும் சிறந்த கொண்டாட்டத்திற்காக! ஈதுல் அத்ஹாவுகாக அவனது மார்க்கத்தில் சமர்பிக்கின்ற எல்லா தியாகங்களையும் அவன் ஏற்றுக் கொள்ளட்டும். அவனது மகிழ்ச்சிக்காகவும் அவனது அன்புக்காகவும் நமக்கு வாழ்வதற்கும் இறப்பதற்கும் முடிந்துவிடட்டும். ஆமீன்.

**Issued by:**

Jamaat Ul Sahih Al Islam

Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Translated by:**
*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817